## அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுமதிப்பீட்டில் A+ (CGPA : 3.64) தகுதிபெற்றது)

நாள் : 30.01.2018

**<u>அழகப்பாபல்கலைக்கழக தொண்டி வளாகத்தில் கடல் சுற்றுலா மையம்</u>**

அறிவியல், சமூகவியல், கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் ஆகிய துறைகளில் இந்தியப் பல்கலைக்கழகங்களில் முன்னிலை நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், கடல் சுற்றுலாமையத்தை(Centre for Marine Tourism)தொண்டிவளாகத்தில் ஆரம்பிக்க உள்ளது என பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் தெரிவித்தார்.

இது குறித்து துணைவேந்தர் அவர்கள் தெரிவித்ததாவது:

சுமார் 900 கி.மீ நீளம் கொண்ட தமிழக கடலோரம் வண்டல்கள், காயல், சதுப்புநிலங்கள், புன்னைக்காடுகள், நீண்ட மற்றும் அகன்ற பீச்சுகள், தொல்லியல் சின்னங்கள், புனிதயாத்திரை ஆர்வலர்களை ஈர்க்கும் கோவில்கள், மற்றும் அகில உலக ஆராய்ச்சியாளர்களை ஈர்க்கும் மன்னார் வளைகுடா போன்ற உயிர் கோள இருப்பு ஆகியவற்றைக் கொண்டு தன்னிகரற்று விளங்குகிறது. இவை அனைத்தும் கடலோர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு, சுற்றுலா மூலம் பெரும் அளவில் வருமானத்தையும் பெருக்கக்கூடியது. ஆனால், இப்பகுதி விவசாயிகளுக்கு நீர் பற்றாக்குறையும், கடலோர மக்கள் மீன் பிடிப்பு ஒன்றையே வாழ்வாதாரமாகக் கொண்டு குறைந்த வருவாயோடு வாழ்வதும் நிரந்தரமாகக் காணப்படுகிறது. மேலும், இக்கடலோரப்பகுதிகள் வெள்ளம், புயல், கடல் நீர் உட்புகுதல், கடல் அரிப்பு, சுனாமி ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன.

ஆகவே, இவற்றை மனதில் கொண்டு, அழகப்பாபல்கலைக்கழக தொண்டி வளாகத்தில் ‘‘கடல் சுற்றுலா மையம்’’ விரைவில் துவங்கப்பட உள்ளது என்று துணைவேந்தர் தெரிவித்தார். மேலும், இம்மையத்தின் செயல்திட்டங்கள் பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

இம்மையம் முதற்கட்டமாக, கடலோர வாழ்வாதாரப் பாதுகாப்பு, இயற்கைப் பேரிடர் ஆபத்தின்மை, கடலோர/கடல் சுற்றுலா மற்றும் கடல் சார் சாகச விளையாட்டுக்கள் ஆகிய நான்கு குறுகிய காலசான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்புகளைத் தொடங்க உள்ளது.

இவற்றில், கடலோரவாழ்வாதாரப் பாதுகாப்புகல்வியானது,மீன் வளத்தைசெயற்கைக் கோள்கள் மூலம் கண்டறிவது,மீன் பிடிப்பு,மீன் தேக்ககம், பதப்படுத்துதல், வணிகம் மற்றும் ஏற்றுமதி, படகுகள் கட்டுமானம், பராமரிப்பு சார்ந்தது. மேலும்,மீன் பிடிப்பு இல்லாத காலங்களில் மீன் துறைசார் மாற்றுத் தொழில் பற்றிய கல்வியும் இதில் அடங்கும். இது மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதோடு, அவர்கள் குழந்தைகளுக்கு நல்ல எதிர் காலத்தை உருவாக்கக் கூடியது.

இயற்கைப் பேரிடர் ஆபத்தின்மை கல்வியானது, இயற்கை பேரிடர், காலநிலையியல்,பேரிடரால் தாக்கப்படும் பகுதிகளைக் கண்டறிந்து, வளர்ச்சிதிட்டமிடுதல், பேரிடர் முன்னறிவிப்பு, மீட்பு, நிவாரணம், பேரிடர் தாக்கபட்டபகுதிகளில், சீரமைப்பு திட்டமிடுதல் பற்றியது. இக்கல்விபயிலுவோர், தங்கள் பகுதியைக் காப்பற்றுவதோடு எதிர் காலத்தில் பேரிடர் பாதுகாப்பு நிபுணராகவிளங்கவும் முடியும்.

இதே போன்று கடல் சுற்றுலா கல்வித் திட்டம், சுற்றுலாவியல், புனித யாத்திரை தளங்கள் மற்றும் அவற்றின் வரலாறு, தொல்பொருள் சின்னங்கள், பீச் ரிசார்ட், படகுசவாரி, கடல் ஓர மற்றும் தீவு கடல் பயணம், நீச்சல், டைவிங் ஆகியவற்றை கொண்டது.

கடல் சார் சாகச விளையாட்டுக்கள் படிப்பு, சாகச விளையாட்டுக்கள், நீர் விளையாட்டு, காற்று உலாவல், படகோட்டம், துருவப்பகுதி படகுவிடுதல், டைவிங் ஆகியவற்றைக் கொண்டவை. இதில் பயிலும் மாணாக்கர்கள், இத்துறையை இப்பகுதியில் வளர்ப்பதோடு, ஒருதொழில் முனைவராக உருவாகி, தங்களது வருமானத்தை பெருக்கிக் கொள்ளமுடியும்.

இக்கல்விதிட்டங்களோடு, இம்மையம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக நீர்சார் சாகச விளையாட்டுக்கள், ஈக்கோபீச் ரிசார்ட், பனைஓலைகுடிசைகள், மீன்பிடித்தல், கடலோர படகுசவாரி, தீவுச் சுற்றுலா, தீவு இரவு தங்குதல், கடலோர புனிதயாத்திரை போன்ற சுற்றுலாக்களையும் நடத்ததிட்டமிட்டுள்ளது.

அவர் மேலும் கூறுகையில், சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை கிழக்குகடற்கரைசாலை வழியாக பயணம் மேற்கொள்ளும் சுற்றுலா பயணிகளுக்கு, தரங்கம்பாடி மற்றும் வேளாங்கன்னியில் கடல் உணவு உணவக வசதிகள் உள்ளது. ஆனால், வேளாங்கன்னியிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள இடைப்பட்ட சாலையில் தரமான கடல் உணவு வழங்கக்கூடிய உணவகங்கள் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு, தொண்டியில் அமைக்கப்பட உள்ள கடல் சுற்றுலா மையத்தில் அழகப்பாபல்கலைக்கழக உணவக அறிவியல் மற்றும் விடுதி மேலாண்மைத் துறையின் உதவியோடு விருந்தினர் மாளிகை, கடல் உணவு உணவகம், விருந்தினர் தங்கும் குடில் போன்றவையும் அமைக்கப்பட உள்ளது என்றும் கூறினார்.

பதிவாளர்

பேரா.ஹா. குருமல்லேஷ் பிரபு